**விரைவு நீதிமன்றம், காரைக்குடி**

**முன்னிலை : செல்வி. செ. ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)**

**நீதித்துறை குற்றவியல் நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், காரைக்குடி.**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண்.1353/2024**

**இன்**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் :82/2023**

1.M/s.Rajapalayam Cement and
Chemicals Ltd company -A1

2.PB.சின்னவெங்கடராஜா-A2,
த/பெ.பல்ராம் ராஜா,

3.பலராம் -A3
த/பெ.ஜெயசுப்பிரமணியன்,

4.ஜெயசுப்பிரமணியன் - A4
த/பெ.பல்ராம்ராஜா,

5.வெங்கடராஜ கோபாலன் - A5,
த/பெ.தோதாத்ரி, ....மனுதாரர்/எதிரிகள்

/எதிர்/

Vidhai Distributors
Private Limited
சந்தியாகு ஆரோக்கியம் ....எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது, கடந்த 16.05.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இன்று 21.10.2024-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.வி.நெல்சன் ஜீவா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.வி.சங்கர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள்

கேட்கப்பட்டும் மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/எதிரிகள் தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட அனுமதிகோரி கு.வி.மு.ச.பிரிவு 91-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**1. மனுச்சுருக்கம்**

(1)மேற்படி புகார்தாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு உள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையில் Vidhai Distributors Private Limited என்ற நிறுவனம் மூலமாக எதிரிகளுக்கு கடன் வழங்கியுள்ளதாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சகோதர நிறுவனம் சம்பந்தமாகவும் சாட்சியம் அளித்து உள்ளார். மேலும், இந்த வழக்கானது எதிரிகளின் மீது தாக்கல் செய்யப்பட்ட பொய் வழக்கு என்பதனை நிரூபணம் செய்ய (1)Vidhai Distributors Private Limited நிறுவனத்தின் கம்பெனிகளின் பதிவாளர், சென்னை அவர்களிடம் கடந்த 2017-2018, 2018-2019, 2019-2020, 2020-2021, 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளில் தாக்கல் செய்த ஆண்டறிக்கை. (2) கடந்த 2017-2018, 2018-2019, 2019-2020, 2020-2021, 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளில் Vidhai Distributors Private Limited நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட வருமானவரி கணக்கு.

(2) புகார்தாரரால் Annexure-II ல் தாக்கல் செய்யப்பட்ட Statement of Account வட்டியுடன் கணக்கீடு செய்யப்பட்டு ஆடிட்டர் முத்திரை மற்றும் கையொப்பத்துடன். (4) புகார்தாரரால் Annexure-I ல் தாக்கல் செய்யப்பட்ட விவரத்தில் கண்டுள்ள மூலதனம் செய்துள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்கள் விவரங்கள், அதன் Statement of Account. (5)கடந்த 01.01.2018-31.01.2023 வரை உள்ள ஆண்டிற்கான காரைக்குடி கிளை, SBI வங்கியின் முத்திரை மற்றும் கையொப்பத்துடன் கூடிய Bank Statement. (6) கடந்த 2017-2018 முதல் 2022-2023 ம் ஆண்டிற்கான GST Monthly

return. (7)புகார்தாரர் சந்தியாகு ஆரோக்கியத்தின் Personal Bank Statement. (8) கடந்த 2018-2023 ம் ஆண்டிற்கான ராசி ஆட்டோமொபைல் நிறுவனத்தின் Bank Statement மற்றும் அதன் 2018-2020 ம் ஆண்டிற்கான GST return. (9)Vidhai Distributors Private Limited நிறுவனத்தின் மற்றொரு இயக்குனரும், சந்தியாகு ஆரோக்கியத்தின் மனைவியுமான திருமதி.எஸ்தர் அவர்களின் Personal Bank Account Statement ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் மட்டுமே வழக்கின் உண்மைத் தன்மையை அறிய முடியும்.

(3)மேற்படி ஆவணங்களை புகார்தாரர் தாக்கல் செய்யாவிட்டால் மனுதாரர்/எதிரிகளின் வழக்கிற்கு பாதகம் ஏற்படும். (1)Vidhai Distributors Private Limited நிறுவனத்தின் கம்பெனிகளின் பதிவாளர், சென்னை அவர்களிடம் கடந்த 2017-2018, 2018-2019, 2019-2020, 2020-2021, 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளில் தாக்கல் செய்த ஆண்டறிக்கை. (2) கடந்த 2017-2018, 2018-2019, 2019-2020, 2020-2021, 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளில் Vidhai Distributors Private Limited நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட வருமானவரி கணக்கு. (3) புகார்தாரரால் Annexure-II ல் தாக்கல் செய்யப்பட்ட Statement of Account வட்டியுடன் கணக்கீடு செய்யப்பட்டு ஆடிட்டர் முத்திரை மற்றும் கையொப்பத்துடன்.

(4) புகார்தாரரால் Annexure-I ல் தாக்கல் செய்யப்பட்ட விவரத்தில் கண்டுள்ள மூலதனம் செய்துள்ள நண்பர்கள் மற்றும் உறவினர்கள் விவரங்கள், அதன் Statement of Account. (5)கடந்த 01.01.2018-31.01.2023 வரை உள்ள ஆண்டிற்கான காரைக்குடி கிளை, SBI வங்கியின் முத்திரை மற்றும் கையொப்பத்துடன் கூடிய Bank Statement. (6) கடந்த 2017-2018 முதல் 2022-2023 ம் ஆண்டிற்கான GST Monthly return. (7)புகார்தாரர் சந்தியாகு ஆரோக்கியத்தின் Personal Bank Statement. (8) கடந்த 2018-2023 ம் ஆண்டிற்கான ராசி ஆட்டோமொபைல் நிறுவனத்தின் Bank

Statement மற்றும் அதன் 2018-2020 ம் ஆண்டிற்கான GST return. (9)Vidhai Distributors Private Limited நிறுவனத்தின் மற்றொரு இயக்குனரும், சந்தியாகு ஆரோக்கியத்தின் மனைவியுமான திருமதி.எஸ்தர் அவர்களின் Personal Bank Account Statement ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.எதிருரை**

இவ்வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களை மனுதாரர்/எதிரிகள் இம்மனு மூலம் தரவழைக்க முற்படுவதாகவும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டிற்கும், மேற்படி ஆவணங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழ் அனுமானம் உள்ள நிலையில் புகார்தாரர் எவ்வகையில் அவரது வழக்கை நிரூபணம் செய்ய வேண்டுமென்று எதிரி நிர்பந்திக்க முடியாது என்றும், ஆகையால் இம்மனு அனுமதிக்கதக்கதல்ல என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா அல்லது இல்லையா?

**4. பிரச்சனைக்குரிய தீர்வு**

1)இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா என்பது குறித்து பார்க்கும்போது மூலவழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.1 குறுக்கு விசாரணையின்போது மனுவில் சொல்லப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் எதிரிகளுக்கும், புகார்தாரர் மற்றும் அவரது நிறுவனத்திற்கும் இடையே உள்ள பரிவர்த்தனைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. எதிரிகள் அவர்களது தரப்பு வழக்கை தனது தரப்பு சாட்சியம் மூலமாகவோ அல்லது புகார்தாரர் தரப்பு வழக்கின்

ஆவணங்கள் மற்றும் சாட்சிகளிலிருந்தும் புகார்தாரருக்கு உள்ள அனுமானத்தை மறுதளிக்க முடியும் என்று பல்வேறு தீர்ப்புகள் பகரப்பட்டுள்ளன.

மேற்படி இருதரப்பினருக்கும் இடையே உள்ள பரிவர்த்தனைகள் தொடர்பான ஆவணங்கள் புகார்தாரரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், அதனை தாக்கல் செய்தால் மட்டுமே வழக்கின் உண்மைத் தன்மை தெரியவரும் என்பதாக மனுதாரர்/எதிரிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற இயற்கை நியதியின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, மனுதாரர்/எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது, என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஏப்ரல் 15-ம் நாள் செவ்வாய்க்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's))
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.